டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 29.11.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 136 | Madurai | Online Edition

தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து ஏற்றுமதியாளர்களுக்கான பயிலரங்கம்

புது தில்லி, நவ.28

இந்தியாவின் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் (FTA) மூலம், இந்தியப் பொருட்களுக்கு உலக சந்தையில், வாய்ப்புகள் விரிவடைந்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் (நவம்பர் 27) ஏற்றுமதியாளர்களுக்கான பயிலரங்கம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற மத்திய வர்த்தகத் துறைச் செயலர் ராஜேஷ் அகர்வால், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் சர்வதேசச் சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

2026 ஏப்ரல் முதல் அக்டோபர் வரை இந்தியாவின் பொருட்கள், சேவைகள் ஏற்றுமதி 16.66% வளர்ந்து 568.84 பில்லியன் டாலரை எட்டியுள்ளது. 2026-27-ம் ஆண்டுக்கான ஏற்றுமதி இலக்கு 1 லட்சம் கோடி டாலராக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ராஜஸ்தானின் ஏற்றுமதி 2025-26-ல் 11.18 பில்லியன் டாலராக இருந்தது.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனிலும் ஏற்றுமதி பயிலரங்கம் நடைபெற்றது. அதில் பேசிய அம்மாநில குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் பாரத் சிங் சௌத்ரி, மாநிலத்தின் ஏற்றுமதி 2017-18-ல் ரூ.10,836 கோடியாக இருந்தது எனவும், 2025-26-ல் ரூ.13,802 கோடியாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரிட்டனுடனான இந்திய ஒப்பந்தம் 99% பொருட்களுக்கும், ஓமனுடனான ஒப்பந்தம் 99.38% ஏற்றுமதிக்கும் வரியில்லா வாய்ப்பை வழங்குகின்றன. நியூசிலாந்துடனான ஒப்பந்தம் சிறு தொழில்கள், விவசாயிகள், பெண்களுக்கு புதிய வாய்ப்புகளைத் தருகிறது. ஏற்றுமதியை அதிகரிக்க ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

புதுக்கோட்டையில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இயக்குநர் ஆய்வு



புதுக்கோட்டை, நவ.28 சென்னை, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்குநர், 25.11.26 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொண்டார். முதலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் வடுகம்பட்டி கிராமத்தில் உயிர்ம விவசாயம் செய்யும் பொதுமைச் செல்வன் விவசாயியின் உயிர்மப் பண்ணையை ஆய்வு செய்தார். ஆய்வின் போது வேளாண் விற்பனைத்துறையின் மூலம் வழங்கப்பட்ட மதிப்புகூட்டு இயந்திரங்களின் பயன்பாடுகளை கேட்டறிந்தார் மற்றும் விவசாயியின் நாட்டுக்கோழி வளர்ப்பு, பராமரிப்பு மற்றும் சந்தைப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றியும் தென்னையில் வாழையில் ஊடுபயிர் சாகுபடி செய்யும் தொழில்நுட்பத்தையும் பற்றி கலந்துரையாடினார். மேலும் சிறு, குறு விவசாயிகள், நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் உயிர்ம விவசாயம் குறித்து நன்மைகள் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

அடுத்ததாக புதுக்கோட்டை இயற்கை உற்பத்தியாளர் (FPO) நிறுவனத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அங்கு FPO நிறுவனம் சார்பாக உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய நெல் இரகங்கள் மற்றும் மதிப்புகூட்டு பொருள்கள் பற்றி FPO தலைவர் ஆதப்பன் மற்றும் CEO அகிலாவிடம் கேட்டறிந்தார். பின்பு மதிப்புக்கூட்டு இயந்திரங்கள் மற்றும் விதை சுத்திகரிப்பு இயந்திரங்களை பார்வையிட்டு அதன் செயல்பாடுகளையும் ஆய்வு செய்தார். பின்னர் FPO நிறுவன உறுப்பினர்களிடம் கலந்தாய்வு மேற்கொண்டு FPO செயல்பாடுகளை குறித்தும் உயிர்மப் பண்ணை செயல்பாடுகள் குறித்தும் எவ்வாறு தங்கள்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தொழிலை விரிவுபடுத்துவது என்பது குறித்தும் அறிவுரைகள் வழங்கினார்.

பின்னர் விதைப்பரிசோதனை நிலையம் சென்று விதைப் பகுப்பாய்வு செயல்முறையை ஆய்வு செய்தார். விதைப் பகுப்பாய்வின் முக்கியத்துவத்தை விவசாயிகளிடம் எடுத் துரைக்க அறிவுரை வழங்கினார்.

ஆய்வின் போது வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குநர், விதை ஆய்வு துணை இயக்குநர், விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர், விதைப் பரிசோதனை அலுவலர், விதைச்சான்று அலுவலர்கள், விதை ஆய்வாளர்கள், வேளாண்மை அலுவலர்கள் (வணிகம்) மற்றும் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் உடனிருந்தனர்.



கோவை மாவட்டம், காருண்யா நிகர்நிலை பல்கலைகழகத்தில் இளம் கீரைகள் பற்றிய ஒரு நாள் பயிற்சி வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கு வேளாண்மை பொறியாளர் வு.யுவராஜ் தட்சிணாமூர்த்தி பயிற்சியில் 150 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். கேள்வி பதில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவிற்கு விழாவிற்கு காருண்யா பல்கலைகழக வேளாண்மை முதல்வர் தலைமை ஏற்றார். இவ்விழா-விற்கான ஏற்பாட்டினை பேராசிரியர் ஜீவிதா செய்திருந்தார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

வேளாண்மைத் துறை சார்பில் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்



கோயம்புத்தூர், நவ.28

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி (தெற்கு) வட்டாரத்திற்குட்பட்ட கூளநாயக்கன்பட்டி கிராமத்தில், வேளாண்மை துறையின் சார்பாக பயறு வகைகள் தன்னிறைவுக்கான இயக்கம் (Mission for Aatmanirbharta in Pulses 2026-27) திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் விளை நிலம் காப்போம் இயக்க முகாம், மண் மற்றும் பாசன நீர் ஆய்வு விழிப்புணர்வு முகாம் ஆகியவை 26.11.26 அன்று விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் மாரியப்பன், துணை வேளாண்மை இயக்குநர் (ஓய்வு), விவசாயிகளுக்கு பயறுவகை தொழில்நுட்பங்கள், பயிர் பாதுகாப்பு, பயறு வகைகளின் பயன்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இவரைத் தொடர்ந்து சந்தியாகு இருதயராஜ், துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மைத் துறையின் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார். மேலும், விளை நிலம் காப்போம் முகாம் பற்றி கூறுகையில், இயற்கை விவசாயத்தின் நன்மைகள், மண் ஆரோக்கியம் மற்றும் நுண்ணூட்ட மேலாண்மை, சமச்சீர் உரப்பயன்பாடு, பசுந்தாள் உரம், இயற்கை உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் சரண்யா, வேளாண்மை அலுவலர், நடமாடும் மண் பரிசோதனை நிலையம், கோயம்புத்தூர், மண் பரிசோதனை செய்வதன் பயன்கள், மண்ணில் அங்கக கார்பன் சத்து உருவாக்குதல் மற்றும் மண்ணின் கரிமப் பொருட்கள் அளவை அதிகரித்தல் மற்றும் மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், மண்ணின் நீர் பிடிப்புத் திறனை மேம்படுத்துதல், மண் அரிப்பை தடுத்து மண் வளத்தை பாதுகாத்தல் பற்றி கூறினார்.

இதனால் நிலையான விவசாயம் மற்றும் அதிக மகசூலை பெற முடியும் என விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள் விவசாயிகளுக்கு மண் பரிசோதனைக்காக மண் மாதிரி எவ்வாறு எடுக்கவேண்டும் என்று செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். மேலும் வானவராயர் கல்வி நிறுவனம் இறுதியாண்டு மாணவிகள் ஜீவாமிர்தம், வேப்பங்கொட்டை கரைசல் தயாரிப்பு பற்றி இம்முகாமில் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

மேலும் இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை சித்ரா, உதவி வேளாண்மை அலுவலர் செய்திருந்தார்.

ஏற்காடு விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி



சேலம், நவ.28

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரத்தில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள ஆத்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான கண்டுணர்வு பயணத்திற்கு 50 விவசாயிகளை எடப்பாடியில் உள்ள தேனீ வளர்ப்பு பண்ணைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

இதில் விவசாயிகளுக்கு தேனீ வகைகள், வளர்ப்பு முறைகள், தேனீ பெட்டிகள் பராமரிப்பு முறைகள், பாதுகாப்பு உப கரணங்கள் பராமரிப்பு முறைகள் பயன்பாடு மற்றும் தேனீக்கள் மூலம் சுற்றுச்சுழல் பயன்பாடு ஆகியவற்றை பயிற்சியாளர் அண்ணாமலை எடுத்துரைத்தார். இதன் மூலம் விவசாயிகள் தங்கள் சந்தேகங்கள் தெளிவு செய்து தகவல்களை கேட்டறிந்து பயன் பெற்றனர்.

இந்நிகழ்வுகளை ஒத்துழைப்பு மற்றும் ஏற்பாடு செய்த வேளாண் உதவி இயக்குநர் ஷீரீன், மற்றும் வட்டார தொழில் நுட்ப மேலாளர் மு.சோபனா, உதவி தொழில்நுட்ப மேலாளர் துரையரசு, அருண்குமார் ஏற்பாடு செய்திருந்தனர்.

டி.வி.புத்தூர் கிராமத்தில் பங்கேற்பு ஊரக மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்ட வேளாண் மாணவிகள்!



கடலூர், நவ.28

கடலூர் மாவட்டம், டி.வி.புத்தூர் கிராமத்தில் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண் மாணவிகளான ரித்திகா, சஹானா சாஜிதா, சாலினி, சந்தியா, சஹானா, ராலினி, சௌமியா, சுபிதா, ஸ்ரீ துர்கா, ஸ்ரீ பிரியா மற்றும் சிந்துஜா ஆகியோர் பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal – PRA) நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கிராம மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, அனுபவங்கள் மற்றும் பங்களிப்புடன் கிராமத்தின் வளர்ச்சி வரலாறு, விவசாய நில உடைமை விவரங்கள், பருவகாலப் பயிர் சாகுபடி முறைகள் மற்றும் சமூகக் கட்டமைப்பு ஆகியவற்றை அறியும் வகையில் பல்வேறு PRA செயல்பாடுகளை மேற்கொண்டனர்.

கிராமத்தின் வளர்ச்சி வரலாறு கால வரிசை அட்டை (Timeline)

கிராமத்தின் கடந்த கால வரலாறு, முக்கிய நிகழ்வுகள் மற்றும் காலப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றங்கள் குறித்து கிராம மக்களிடம் கலந்துரையாடி, அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கால வரிசை அட்டை தயாரிக்கப்பட்டது.

விவசாய நில உடைமை விவரங்கள் விவசாய விவர வரைபடம் (Landholding Map)

கிராமத்தில் உள்ள விவசாய நிலங்களின் உடைமைப் பகிர்வு மற்றும் நிலப்பரப்பு விவரங்களை விவசாயிகளிடம் கேட்டறிந்து, அவற்றை வரைபடமாகத் தொகுத்தனர்.

பருவகாலப் பயிர் சாகுபடி பயிர் கால வரிசை (Seasonal Calendar)

கிராமத்தில் பயிரிடப்படும் பயிர்கள், அவற்றின் சாகுபடி பருவங்கள்

மற்றும் பருவகால விவசாய நடவடிக்கைகள் குறித்து விவசாயி களுடன் கலந்துரையாடி பயிர் கால வரிசை தயாரிக்கப்பட்டது.

கிராமத்தின் சமூகக் கட்டமைப்பு சமூக வரைபடம் (Social Mapping) கிராமத்தின் குடியிருப்புகள், வீடுகளின் அமைப்பு மற்றும் பொதுப் பயன்பாட்டு இடங்கள் குறித்த விவரங்களை கிராம மக்களின் உதவியுடன் சேகரித்து சமூக வரைபடம் வரையப்பட்டது.

இச்செயல்பாடுகள் மூலம் கிராம மக்களின் அனுபவ அறிவு மற்றும் உள்ளூர் விவசாய நடைமுறைகளை மாணவிகள் நேரடியாக அறிந்துக் கொண்டனர்.



இயற்கையோடு இயைந்த விதை சேமிப்பு



இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஏழாயிரம் கோடி மதிப்புள்ள 14 – 16 மில்லியன் மெட்ரிக் டன் மதிப்புள்ள உணவு தானியப் பொருட்கள் சேமிப்பின் போது வீணாகின்றது. அவற்றில் பூச்சியினால் மட்டும் 1300 கோடி மதிப்புள்ள உணவு தானியப் பொருட்கள் சேமிப்பின் போது வீணாகின்றது. உலக வங்கியின் அறிக்கையின் படி 'இந்தியாவில் சேமிப்பின் போது வீணாகும் உணவு தானியத்தைக் கொண்டு மூன்றில் ஒரு பங்கு ஏழைகளுக்கு உணவளிக்கலாம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக ஆய்வின்படி தமிழ்நாட்டில் தானிய சேமிப்பின்போது 6.8 சதவீதமும் இழப்பு ஏற்படுகிறது. அவற்றில் 2 முதல் 4.2 சதவீதம் வரை பூச்சியினாலும் 2.5 சதவீதம் எலியினாலும், 0.85சதவீதம் பறவைகள் மற்றும் 0.68 சதவீதம் ஈரப்பதத்தினாலும் வீணாகின்றது.

விதை சேமிப்பின் போது பூச்சிகள் வருமுன் தடுப்பதே சாலச் சிறந்ததாகும். தமிழ்நாட்டில் நம் முன்னோர்கள் பூச்சி சேதத்தைத் தடுக்க தொன்றுதொட்டே பல தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து வந்துள்ளனர். அவற்றில் வழக்கத்திலுள்ள சில தொழில்நுட்பங்கள்.

வேப்ப இலை

நெல், பயறுவகை மற்றும் எண்ணெய்வித்து பயிர்களின் விதை சேமிப்பில் விதைகளுடன் வேப்ப இலைகளைக் கலந்து சணல் சாக்கில் கட்டி வைப்பதன் மூலம் அனைத்து வகையான சேமிப்பில் தாக்கும் பூச்சி வகைகளையும் அண்ட விடாமல் தடுக்கலாம்.

வேப்பெண்ணெய்

வேப்பெண்ணெய் மிகச்சிறந்த பூச்சி விரட்டியாகும். பயறுவகை விதைகள் சேமிப்பில் ஒரு கிலோ விதைக்கு 20 மிலி வேப்பெண் ணெய் கலந்து சணல் சாக்கில் கட்டி வைத்தால் பூச்சிகள் உண்ணுவது மட்டுமல்லாமல் விதையின் மேல் முட்டையிடுவதும் தடுக்கப்படுகிறது.

வேப்ப விதைக்கரைசல்

விதைகளை குறுகிய கால விதை சேமிப்பிற்கு சணல் சாக்குகளை வேப்ப விதைக்கரைசலில் நனைத்து நிழலில் காயவைத்து அவற்றில் நெல், பயறுவகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர் களின் விதைகளை சேமித்தால் சாக்கிலிருந்து வரும் வாடைக்கு பூச்சிகள் நெருங்காது. 10 கிலோ வேப்ப விதையை பொடியாக்கி அவற்றை 100 லிட்டர் தண்ணீரில் 24 மணி நேரம் ஊரவைத்து பின்பு வடிகட்டினால் கிடைப்பதே வேப்ப விதைக்கரைசல்.

நாய்த்துளசிச் செடி இலை

துவரை, உளுந்து போன்ற பயறுவகை விதைகளை நாய்த்துளசி இலைகளுடன் கலந்து சணல் சாக்கில் கட்டி சேமித்தால் பூச்சித் தாக்குதலில் இருந்து 3-6 மாதம் வரை தடுக்கலாம்.

எள் விதை சேமிப்பில் நெல்

எள் விதைகளை சேமிக்கும் போது 1 கிலோவிற்கு 10கிராம் நெல்மணிகளை கலந்து சேமிப்பதால் எள் விதையை தாக்கும் இந்தியன் மாவு அந்துப்பூச்சி தாக்குலைக் குறைக்கலாம். நெல்லின் கூர்மையான பகுதியானது அந்துப்பூச்சியின் புழுக்கள் கூண்டுப் புழுப் பருவம் அடைவதற்கு தடையாக உள்ளது.

கேழ்வரகு விதை சேமிப்பில் வேம்பு மற்றும் தும்பை இலை

கேழ்வரகுடன் வேம்பு அல்லது தும்பை இலைகளை கலந்து வைப்பதால் ஓராண்டு வரை பூச்சி தாக்குதலைத் தடுக்கலாம்.

வசம்பு பவுடர்

வசம்பு ஒரு சிறந்த பூச்சி விரட்டியாகும். வசம்பை பொடியாக்கி நெல், பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் விதைகளுடன் ஒரு கிலோ விதக்கு 10 கிராம் வசம்பு பொடி என்ற கணக்கில் கலந்து வைத்தால் ஓராண்டு காலம் வரை பூச்சிகள் அண்டாது.

நெல் விதை சேமிப்பில் புங்க இலை

புங்க இலைகளை நெல் விதை மூட்டைகளுக்கு இடையில் வைப்பதன் மூலம் பூச்சிகள் வராவிடாமல் தடுக்கலாம்.

செம்மண் கரைசல்

துவரை, உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறுவகை விதைகளை செம்மண் கலவையுடன் கலந்து காயவைத்த பின் சேமித்து வைத்தால் பூச்சிகள் அண்டாமல் ஒரு வருடகாலம் வரை சேமிக்கலாம்.

விளக்கெண்ணெய்

பயறுவகை விதைகளில் விளக்கெண்ணெய் தடவி சேமித்தால் விதை சேமிப்பின் போது சேதப்படுத்தும் பூச்சிகள் தாக்காமலும் முட்டைகள் இடாமலும் தடுக்கலாம்.

சூடம்

எல்லா வகையான விதை சேமிப்பின் போதும் 5 கிலோ விதைக்கு ஒரு சூடம் என்ற கணக்கில் சேர்த்து சணல் சாக்கின் சேமிப்பதன் மூலம் அனைத்து வகையான பூச்சிகளையும் வராமல் தடுக்கலாம். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை விதையினை வெயிலில் காயவைத்து புதியதாக சூடம் இட்டு சேமிக்க வேண்டும்.

காய்கறி விதை சேமிப்பில் மாட்டுச் சாணம்

ஈரமான மாட்டுச் சாணத்துடன் சுரை, பூசணி, பாகல், புடலை, சுரை, பீர்க்கை போன்ற வதைகளை ஈர மாட்டுச் சாணத்துடன் கலந்து வரட்டியாகத் தட்டி 2–3நாட்கள் வெய்லில் காயவைத்து பின்பு சேமித்த வைத்தால் ஓராண்டுக்கும் மேலாக பூச்சித் தாக்குதலின்றி சேமிக்கலாம்.

அடுப்புச் சாம்பல்

சோள விதை சேமிப்பில் சாம்பல் மற்றும் சோள விதைகளை 1:4 என்ற விகிதத்தில் கலந்து வைத்தால் ஆறு மாத காலம் வரை பூச்சிகள் அண்டாது.

இவ்வாறு சேமித்து வைத்த விதைகளின் தரத்தினை விதைப் பதற்கு முன் பரிசோதனை செய்து விதைப்பதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம்.

விதை உற்பத்தி, விற்பனை நிலையங்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் முளைப்புத்திறனை அறிந்து கொள்ள நேரடியாக மதுரை, நாகமலை புதுக்கோட்டை விதைப் பரிசோதனை நிலையத்தில் ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- வீதம் விதைப் பரிசோதனை கட்டணத்தை செலுத்தி தெரிந்து கொள்ள லாம் என மதுரை விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் பெரி.இராமலெட்சுமி மற்றும் சி.கமலாராணி தெரிவிக்கின்றனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

பாராகுவாட் களைக் கொல்லிக்கு தடை - தெரியுமா?



விவசாயிகளால் அதிகமாக பயன்படுத்தக்கூடிய களைக் கொல்லி தான் பாராகுவாட் டை குளோரைடு (PARAQUAT DI CHLORIDE). இதனுடைய இறக்குமதி, உற்பத்தி விற்பனை போக்குவரத்து வினியோகம் மற்றும் பயன்பாட்டிற்கு நாடு முழுவதுமாக மத்திய அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது எந்த எந்த பயிரில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது தெரியுமா?

தேயிலை, காபி, பருத்தி, ரப்பர், நெல், கோதுமை, மக்கா சோளம், உருளைக்கிழங்கு, திராட்சை மற்றும் ஆப்பிள் போன்ற பயிர்களில் அறுவடைக்கு முன் காய்களை கட்டு படுத்தவும், முழுமையாக விளைச்சல் பெறவும், பயிர்களை உடனடியாக காயவைக்கவும், இந்த களைக்கொல்லி (WEEDICIDE) பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த களைக்கொல்லி அதிக நச்சு தன்மை வாய்ந்தது எப்படி?

இதை உட்கொள்ளுவது அல்லது சுவாசிப்பதால், கடுமை யான நுரையீரல் நீர்பெருக்கம், சிறுநீரக செயலிழப்பு, இதய பாதிப்பு, பார்க்கின் சன் நோய் போன்றவை உண்டாகுவதோடு, இதுவரை இதற்கு மாற்று மருந்து இல்லாத காரணத்தால் பெரும்பாலும் மரணம் எற்படுகிறது.

தடை விதிக்க கூறும் காரணங்கள்?

பூச்சிக் கொல்லி சட்டம் 1968யின்படி, நிபுணர் குழு மற்றும் பதிவு குழுவின் ஆலோசனைக்கு பிறகு இந்த நடவடிக்கை மத்திய அரசால் எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 70க்கு மேற்பட்ட நாடுகளில் இந்த பாராகுவாட் களைக்கொல்லி தடை செய்யப் பட்டுள்ளது.

தடை விதிக்கப்பட்ட மருந்துகளின் பெயர்கள் என்னென்ன?

பாராகுவாட் டை குளோரைடு 24 (S.L), பாராகுவாட் டை குளோரைடு 24% ஆக்ஸிப்ளூ ரோபென் 5% SL, பாராகுவாட் டை குளோரைடு 22.4% மற்றும் ஆக்ஸி புளுரோ 9% களைக் கொல்லி மருந்துகள் அதிக நச்சுத்தன்மையும் கொண்டதால் பயன்படுத்தக்கூடாது. எனவே விவசாயிகளில் தங்களது வயல் களில் களைகளை கட்டுப்படுத்த அரசால் அனுமதிக்கப் பட்ட களைக்கொல்லி மருந்துகளை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

பாராகுவாட் களைக்கொல்லியின் வணிக பெயர்கள் தெரியுமா?

கிரோமக்சோன், மில்கி வாட், ஆல்கிளியர், டேக்குவாட், வில்கு வாட் பாராலைட், பாராகுவாட் கட்டுப்படுத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது. இது பூச்சிக் கொல்லி ஒழுங்குமுறையை வலுப்படுத்தவதற்கும், பொது சுகாதாரத்தையும், பாதுகாப்பிற்கும் நிலையான நடைமுறை களை ஊக்குவிக்கும் ஒரு முக்கிய படியாக அமையும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



பயிர் விளைச்சல் போட்டிகளில் அதிக விளைச்சல் ஈட்டும் விவசாயிகளுக்கு ரொக்க பரிசு

சேலம், நவ.28

பயிர் விளைச்சல் போட்டிகளில், அதிக விளைச்சல் ஈட்டும் விவசாயிகளுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்பட உள்ளது.

இது தொடர்பாக சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம், வேளாண்மை உதவி இயக்குநர் சண்முகப்பிரியா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, தமிழ்நாட்டில் மாநில,மாவட்ட அளவில் அனைத்து பயிர்களிலும் உற்பத்தித் திறனை பெருக்கும் நோக்கில் பயிர் விளைச்சல் போட்டிகளில் அதிக விளைச்சல் ஈட்டும் விவசாயிகளுக்குரொக்க பரிசுகளை அறிவித்துள்ளது.

அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் மாநில அளவிலான சிறு, குறு விவசாயிகளுக்கான மக்கள் சேவை அஞ்சலை அம்மாள் விருது போட்டியில் கம்பு மற்றும் சாமை ஆகிய பயிர்களில் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு அளவில் பயிர் வாரியாக அதிக மகசூல் ஈட்டி, முதலிடம் பெறும் விவசாயிக்கு ரூ.2.50 இலட்சம், இரண்டாம் இடத்திற்கு ரூ.1.50 இலட்சம், மூன்றாம் இடத்திற்கு ரூ.1 இலட்சம் வழங்கப்படும்.

மாவட்ட அளவிலான வெற்றி விவசாயி விருது போட்டிகளில் சோளம் மற்றும் மக்காச்சோளம், ஆகிய பயிர்களில் நடத்தப் படுகிறது. மாவட்ட அளவில் முதலிடம் பெறும் விவசாயிக்கு ரூ.50,000, இரண்டாம் இடத்திற்கு ரூ.25 ஆயிரம் வழங்கப்படும்.

மாநில அளவிலான சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது போட்டி திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்து, அதிக மகசூல் ஈட்டும் விவசாயிகளுக்கு நடத்தப்படுகிறது. இதில் வெற்றி பெறும் விவசாயிகளுக்கு விருது மற்றும் சிறப்பு பரிசாக ரூ.5 லட்சம் வழங்கப்படும். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திருந்திய நெல் சாகுபடி முறை மூலம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட சன்ன ரக நெல் ரகங்களை சாகுபடி செய்திருக்க வேண்டும்.

இப்போட்டிகளில் பங்கேற்கும் விவசாயிகள் குறைந்தபட்சம் 2 ஏக்கரில் பயிர் சாகுபடி செய்ய வேண்டும். சிறுதானியங்களுக்கு குறைந்தபட்சம் ஒரு ஏக்கரில் பயிர் சாகுபடி செய்ய வேண்டும்.

குத்தகைதாரர்களும் போட்டியில் கலந்து கொள்ள தகுதியுடைய வர்கள். போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் உரிய விண்ணப் பத்தை பூர்த்தி செய்து பதிவு கட்டணமாக ரூ.150 தங்களுடை

வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் செலுத்தி பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் திரும்பி தரப்பட மாட்டாது.

விண்ணப்பத்துடன் பயிரிடப்பட்டுள்ள பரப்பின் சான்று ஆவணங்களான பதிவு கட்டணம் செலுத்திய ரசீது மற்றும் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை, நில வரைபடம், வங்கி கணக்கு எண் அட்டை, தமிழ்நாடு விவசாய அடையாள எண் பதிவு செய்த சான்று, மின்னணு பயிர்க் கணக்கீடு சான்று நகல்கள் ஆகியவற்றை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும் என்று அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.ச.ண்முகபிரியா தெரிவித்துள்ளார்.



நெற்பயிரில் வறட்சியைக் கட்டுப்படுத்த பி.பி.எப்.எம். கரைசல் தெளிக்க பரிந்துரை



மயிலாடுதுறை, நவ.28

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் வட்டம், மருதம்பள்ளம் மற்றும் காளமநல்லூர் கிராம விவசாயிகளுக்கு. சம்பா நெற்பயிர்கள் வறட்சியைச் சமாளிக்க பி.பி.எப்.எம். எனும் திரவ நுண்ணுயிர் மெத்திலோ பாக்டீரியம் கரைசல் தெளிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி 27.11.2026 அன்று நடத்தப்பட்டது.

தற்போது வடகிழக்கு பருவமழை மற்றும் வாய்க்கால் பாசனத்தில் போதிய நீர்வரத்து இல்லாத நிலையில், வறட்சியைத் தாங்கும் மற்றும் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் உயிர் உரம் பி.பி.எப்.எம். தெளிக்கப்பட வேண்டும். பி.பி.எப்.எம். என்பது தாவரங்களில் இலை பரப்பில் வாழக்கூடிய நன்மை தரும் நுண்ணுயிரியாகும். இது பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் இலைகளில் பச்சையத்தின் அளவை அதிகரித்து, வறட்சி மற்றும் அதிக வெப்பம் போன்ற இயற்கை சூழல் மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளைப் பயிர்கள் தாங்கும் திறனை மேம்படுத்த உதவுகிறது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் முனைவர் த.முத்துகுமாரராஜா, முனைவர் இரா.முத்துகுமார் மற்றும் முனைவர் நா.முத்துகுமரன் ஆகியோர் பார்வையிட்டு, ஆலோசனை வழங்கினர். அப்போது, வறட்சிக் காலங்களில் 15 முதல் 20 நாட்கள் பயிர்கள் வாடாமல் பாதுகாக்க மற்றும் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் உயிர் உரங்களை தெளிக்க வலியுறுத்தினர். மேலும், பாதிக்கப்பட்ட நெல் வயலில் இலை வழி தெளிப்பாக 1 சதவீதம் மெத்திலோ பாக்டீரியா நீரில் கரைத்து காலை அல்லது மாலை நேரத்தில் இலைகள் நனையும் படி நெற்பயிரின் முக்கிய வளர்ச்சிப் பருவங்களில் அல்லது 30, 45 நாட்களுக்கு ஒரு முறை கைத்தெளிப்பான், பவர் ஸ்பிரேயர் மூலம் தெளிக்க பரிந்துரைத்தனர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செம்பனார்கோயில் வட்டார உதவி வேளாண்மை அலுவலர் பிரபாகரன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் தியாகு, உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வகுமரன் செய்திருந்தனர்.

சம்பா பயிருக்கு காப்பீடு செய்ய கால அவகாசம் நீட்டிப்பு!

புதுக்கோட்டை, நவ.28

புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல் சம்பா பயிருக்கு பயிர் காப்பீடு செய்வதற்கான கால அவகாசம் டிசம்பர் 1 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஆ.அபிநயா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறிய தாவது, புதுக்கோட்டை வட்டாரத்தில் 2026-27 ஆம் ஆண்டிற் கான ராபி - சிறப்புப் பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் சம்பா பயிரானது, எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் பொழுது விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கிட பயிர்க் காப்பீடு திட்டத்தின் கீழ் வழி வகை செய்யப் பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா பயிருக்கு பயிர் காப்பீடு செய்வதற்கான கடைசி நாள் கடந்த 15ம் தேதியாக நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. ஆனால் கால நீட்டிப்பு செய்ய வேண்டி விவசாயிகள் கோரிக்கை அளித்ததைத் தொடர்ந்து, மத்திய மற்றும் மாநில அரசுகள் அந்தக் கோரிக்கையினை பரிசீலனை செய்து நெல் சம்பா பயிருக்கு பயிர் காப்பீடு செய்வதற்கான கால அவகாசத்தை டிசம்பர் 1-ம் தேதி வரை நீட்டிப்பு செய்துள்ளது. நெல் சம்பா பயிருக்கான பரீமியம் தொகை ஏக்கருக்கு ரூ.558.52 ஆகும், மாவட்டத்தில் இவ்வாண்டு பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களிலும் நெல் சம்பா பயிரினை சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த காப்பீட்டுத் திட்டத்தில் இணையலாம். இத்திட்டத்தில் இணைய நடப்பில் உள்ள வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார்அட்டை நகல், சிட்டா மற்றும் நடப்பு பசலி அடங்கல் ஆகிய ஆவணங்களுடன் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசிய மயமாக்கப் பட்ட வங்கி மற்றும் பொது சேவை மையங்கள் மூலமாகவும் உரிய பரீமியம் தொகை செலுத்தி மேற்குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் பயிர்க் காப்பீடு செய்து பயனடையலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ,28 கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 27.11.26 அன்று, காட்டுமன்னார் கோவில், குமாராட்சி மற்றும் கம்மாபுரம் வட்டாரத்தில் உள்ள வீரநந்தப்புரம், தோருக்குழி மற்றும் கூனங்குறிச்சி ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் கண்ணன், சத்தியநாராயணன் மற்றும் சிவசங்கர் ஆகியோர் கலந்துக்கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார்.

உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டுமத்தியமாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், குமாராட்சி மற்றும் கம்மாபுரம் வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

நீலகிரி மாவட்ட பழங்குடியின விவசாயிகளுக்கு பாதுகாப்பான காய்கறி உற்பத்தி குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி



ஊட்டி, நவ.28

நீலகிரி மாவட்டத்தில் பூஞ்சை மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக உருளைக் கிழங்கு, கேரட், முட்டைகோஸ் போன்ற பயிர்களுக்கு 10 முறைக்கும் மேல் தெளிக்கப்படுகிறது. இதைக் குறைத்து, தோடர், கோட்டா மற்றும் குறும்பர் பழங்குடியின விவசாயிகளிடையே பாதுகாப்பான காய்கறி உற்பத்தி மற்றும் உயிரியல் அடிப்படையிலான ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (த.வே.ப.க.) பயிர் நோயியல் துறை, பயிர் பாதுகாப்பு மையம், ICAR பழங்குடியினர் துணைத் திட்டத்தின் (TSP) கீழ் முதற்கட்ட விழிப்புணர்வுப் பயிற்சிகளை நவம்பர் 3 அன்று குன்னூர் வட்டம், அதிகரட்டி ஊராட்சி கொல்லிமலை கிராமத்திலும், நவம்பர் 4 அன்று கோத்தகிரி வட்டம் கக்குச்சி ஊராட்சி திருச்சிக்கடி கிராமத்திலும், நவம்பர் 5 அன்று ஊட்டி வட்டம் தமிழகமந்து கிராமத்திலும் நடத்தியது.

தொடக்க நாளான நவம்பர் 3 அன்று பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர் மு.சாந்தி பயிற்சியைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். பயிர் நோயியல் துறைத் தலைவர்முனைவர் க.அங்கப்பன், இணைப் பேராசிரியர்கள் முனைவர் இ.ஜான்சன் மற்றும் முனைவர் மு.கார்த்திகேயன் ஆகியோர் திட்டத்தின் நோக்கம் மற்றும் பாதுகாப்பான காய்கறி உற்பத்தியின் அவசியம் குறித்து எடுத்துரைத்தனர்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து விவசாயிகளிடமிருந்தும் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, நீலகிரி மண் பரிசோதனை நிலையத்தில் இலவசமாகப் பரிசோதிக்கப்பட்டன. பரிசோதனை அறிக்கைகள் மற்றும் மண் பகுப்பாய்வு அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்க படும், மண்ணில் உள்ள பூச்சிக்கொல்லி எச்சத்தின் அளவும் தெரிவிக்கப்படும். மண்ணில் உள்ள ஊட்டச்சத்து அளவுகளின் அடிப்படையில் உரப்பயன்பாட்டை எவ்வாறு குறைப்பது என்பது குறித்தும், மண்மாதிரிகளை எவ்வாறு சரியாகச் சேகரிப்பது என்பது குறித்தும் அனைத்து விவசாயிகளுக்கும் விளக்கப்பட்டது.

விவசாயிகளின் தேவைகளும் குறைகளும் கேட்டறியப்பட்டன. மேலும், அறிமுகக் கூட்டத்தில் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டதுடன், அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதும் விளக்கப்பட்டது. நவம்பர் 4 மற்றும் 5 தேதிகளில் முனைவர் இ.ஜான்சன், முனைவர் மு.கார்த்திகேயன் ஆகியோருடன் முத்தோரை ICAR மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிறுவன மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் முனைவர் க.ல.திவ்யாமற்றும் முனைவர் ச.பிரவீன் பட்டட் ஆகியோரும் உரையாற்றினர். பூச்சிக்கொல்லி பயன் பாட்டைக் குறைப்பது குறித்தும், நோய் மேலாண்மைக்கு டிரைக்கோ டெர்மா விரிடி (Trichodermaviride), பேசில்லஸ்சப்டிலிஸ் (Bacillus subtilis), பூச்சி மேலாண்மைக்கு மெட்டாரைசியம் அனிசோபிலியே (Metarhiziumanisopliae), பியூவேரியா பாசியானா (Beauveri-abassiana), நூற்புழுக் கட்டுப்பாட்டிற்கு போக்கோனியாகிளாமி டோஸ்போரியா (Pochoniachlamydosporia) ஆகியவற்றைப் பயன் படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கினர். இத்திட்டத்தின் இறுதி நோக்கம், பூச்சி மற்றும் நோய்களுக்கு எதிரான உயிரியல் காரணி களின் உபயோகத்தை அதிரிகரித்து பூஞ்சை மற்றும் பூச்சிக்கொல்லி களின் பயன்பாட்டைக் குறைப்பதாகும். செயல்விளக்கங்கள், பண்ணை அளவிலான உற்பத்தி மற்றும் பெருக்கம், வயல் கண்காணிப்பு, தொழில்நுட்ப ஆதரவு ஆகியவை அடுத்தடுத்த நிகழ்வுகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இந்த மூன்று நாள் பயிற்சிகளையும் ஆராய்ச்சி மாணவர் இரா.லோகேஷ், த.வே.ப.க. ஒருங்கிணைத்தார்.

வீரிய ஒட்டு வெண்டை ரகம் கோ எச் 5 பரவலாக்கம் குறித்த செயல் விளக்கம்

புதுக்கோட்டை, நவ.28

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட வீரிய ஒட்டு வெண்டை ரகமான கோ எச் 5-ஐ விவசாயிகளிடையே பரவலாக்கும் நோக்கில் செயல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம. தமிழ்ச் செல்வன் தலைமை வகித்து, கோ எச் 5 ரகத்தின் சிறப்பம்சங்கள், அதிக மகசூல் திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட வெண்டை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். மேலும், முனைவர் ரா. ராம்ஜெகதீஷ், பயிர் பாதுகாப்பு விஞ்ஞானி, வெண்டைப் பயிரில்

ஏற்படும் முக்கிய பூச்சிகள் மற்றும் நோய்கள், அவற்றின் அறிகுறிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்துத் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு வெண்டை ரகமான கோ எச் 5 விதைகள் இடுபொருளாக வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பி. கருப்ப சாமி, திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்) மற்றும் அ.தினகரன், காலநிலை கண்காணிப்பாளர் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

ஆலங்காயம் உழவர் சந்தைக்கு வேளாண் கல்லூரி மாணவர்கள் களப்பயணம்!

திருப்பத்தூர், நவ.28

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு வேளாண் பட்டப்படிப்பு மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயத்தில் செயல்பட்டு வரும் உழவர் சந்தைக்கு களப்பயணம் மேற்கொண்டனர்.



இந்தப் பயணத்தின் போது உழவர் சந்தையின் செயல்பாடுகள், விவசாயிகள் தங்களது விளைபொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்யும் முறை, காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை நிர்ணயம், சந்தைப்படுத்துதல் மற்றும் இடைத்தரகர்களின் தலையீடு இன்றி விவசாயிகள் பயன்பெறும் வழிமுறைகள் குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

மேலும், உழவர் சந்தையின் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் மற்றும் நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான காய்கறிகள் கிடைப்பது குறித்தும் கேட்டறிந்தனர். இந்தக் களப்பயணம் மாணவர்களுக்கு வேளாண் விளைபொருட்களின் நேரடி விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய நடைமுறை அறிவை வழங்கியது.

நாவினிப்பட்டி கிராம விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பு பயிற்சி!

மதுரை, நவ,28

காரைக்குடியில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நான்காம் ஆண்டு வேளாண் மாணவர்கள் தவமுகுந்தன், சிவா, இதய எல்சன், பிரதீப்குமார், காமேஸ்வர் மற்றும் கோடீஸ்வர் ஆகியோர், ஊரக





வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாவினிப்பட்டி கிராம விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பு குறித்த சிறப்புப் பயிற்சி மற்றும் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், விவசாயிகளுக்கு முறையான மண் மாதிரி சேகரிப்பு முறைகளைப் பயிற்றுவிப்பதுடன், மண் பரிசோதனை செய்வதன் அவசியம் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். நிகழ்ச்சியில், விவசாய நிலங்களில் மண் மாதிரிகளை எவ்வாறு சேகரிக்க வேண்டும், எந்தெந்த இடங்களில் இருந்து மாதிரிகளைச் சேகரிக்க வேண்டும், மண் மாதிரி சேகரிப்பதற்கு முன்பு மேற் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என் னென்ன என்பது குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், நிலத்தின் மேற்பரப்பில் உள்ள இலைகள், குப்பைகள் மற்றும் பிற பொருட்களை அகற்றிய பின்னர், சரியான ஆழத்தில் மண் மாதிரிகளைச் சேகரிப்பதன் அவசியம் விளக்கப்பட்டது. வயலின் பல்வேறு இடங்களில் இருந்து மண் மாதிரிகளைச் சேகரித்து, அவற்றை நன்கு கலந்து பிரதிநிதித்துவ மண் மாதிரி யாகத் தயாரிக்கும் முறையும் விவசாயிகளுக்குக் கற்பிக்கப்பட்டது. தொடர்ந்து, சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை நிழலில் உலர்த்துதல், கற்கள் மற்றும் வேர் போன்ற தேவையற்ற பொருட் களை அகற்றுதல், முறையாகப் பொட்டலமிட்டு விவசாயியின் பெயர், நில விவரங்கள் மற்றும் பயிர் விவரங்களைக் குறிப்பிட்டு மண் பரிசோதனைக்காக ஆய்வகத்திற்கு அனுப்புதல் போன்ற நடை முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. மண் பரிசோதனை செய்வதன் மூலம் மண்ணில் உள்ள தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து மற்றும் பிற ஊட்டச்சத்துகளின் நிலையை அறிந்து கொள்ள முடியும் என்றும், மண்ணின் கார அமிலத் தன்மை (pH) மற்றும் மின் கடத்துத்திறன் (EC) போன்ற பண்புகளையும் கண்டறிய முடியும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் பயிர் களுக்குத் தேவையான உரங்களைச் சரியான அளவில் பயன் படுத்துவதன் மூலம் தேவையற்ற உரச் செலவுகளைக் குறைக்கவும், மண்ணின் வளத்தைப் பாதுகாக்கவும், பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூலை மேம்படுத்தவும் முடியும் என விவசாயிகளுக்கு விளக்கப் பட்டது.

மண்ணின் தன்மையை அறியாமல் உரங்களைப் பயன்படுத்து வதால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் மற்றும் மண்வளம் பாதிக் கப்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. எனவே, ஒவ்வொரு விவசாயியும் தங்களது நிலத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் மண் பரிசோதனை மேற்கொண்டு, அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் உர மேலாண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகள் முறையான மண் மாதிரி சேகரிப்பு முறைகளை அறிந்து கொண்டதுடன், மண் பரிசோதனை யின் அவசியம் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வேளாண் மற்றும் பொருளாதார நன்மைகள் குறித்தும் விழிப்புணர்வு பெற்றனர்.

கலவை உர உற்பத்தி மையங்கள் பிற மாவட்ட அதிகாரிகள் ஆய்வு

மதுரை, நவ.28

மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) அ.இராணி விடுத்துள்ள அறிக்கையில், மாவட்டத்தில் செயல்படும் கலவை உர உற்பத்தி மையங்கள் பிற மாவட்ட அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு தரமான உரங்கள் உற்பத்தி உறுதி செய்யப்பட்டது என தெரிவித்தார்.

அனைத்து மாவட்டங்களில் செயல்படும் கலவை உர உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்யப்படும் கலவை உரங்களுக்கு தேவைப் படும் மூலப்பொருட்கள், யூரியா, டிஏபி பொட்டாஷ் சரியான அளவு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் அதன் தரம் உற்பத்தி அளவு தொடர்பாக பிற மாவட்ட அதிகாரிகளை கொண்டு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டது. மதுரை மாவட்டத்தில் செயல்படும் டான்பெட் கலவை உரம் உற்பத்தி மையம் உட்பட அனைத்து உரம் உற்பத்தி மையங்களில், விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட அதிகாரிகள் மூன்று தினங்கள் ஆய்வு மேற்கொண்டனர். உரம் விநியோகம், தரம் தொடர்பாக தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மாவட்டத்தில் தற்போது யூரியா 3211 மெ.டன், டிஏபி 1521 மெ.ன், பொட்டாஷ் 568 மெ.டன், காம்ப்ளக்ஸ் 2370 மெ.டன் இருப்பு உள்ளதாகவும் விவசாயிகள் வாங்கி பயன்பெறவும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், வருங்காலத்தில் அனைத்து மானிய திட்டங்கள் மூலம் பயன்பெற தனித்துவ அடையாள எண் அவசியம் என்பதால் விடுபட்ட அனைத்து விவசாயிகளும் தங்கள் கிராமங் களில் நடைபெறும் முகாம்களிலோ அல்லது வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களையோ தொடர்பு கொண்டு பதிவு செய்து பயன்பெற கேட்டுக்கொண்டுள்ளார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

உயிரியல் எரிபொருள் கட்டிகள் தயாரிப்பு

அறிமுகம்

தற்போதைய சூழலில் எரிசக்தியின் தேவை அதிகரித்து வருவதால், நிலக்கரி மற்றும் பெட்ரோலியம் போன்ற புதைபடிவ எரிபொருட் களுக்கு மாற்றாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன் படுத்துவது அவசியமாகிறது. விவசாயத்தில் கிடைக்கும் நெல் உமி, தேங்காய் நார் கழிவு, கரும்புச் சக்கை, மரத்தூள், நிலக்கடலை ஓடு மற்றும் பருத்தித் தண்டுகள் போன்ற உயிரியல் கழிவுகளைப் பயன் படுத்தி எரிபொருள் கட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இத் தொழில் நுட்பம் உயிரியல் எரிபொருள் கட்டிகள் தயாரிப்பு எனப்படுகிறது. தமிழ்நாட்டில் விவசாயக் கழிவுகள் அதிக அளவில் கிடைப்பதால், அவற்றை எரிபொருளாக மாற்றுவது விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் வழங்குகிறது.

தயாரிப்பு தொழில்நுட்பம்

முதலில் விவசாயக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, உலர்த்தப்பட்டு, அரைக்கும் இயந்திரத்தின் மூலம் சிறிய துகள்களாக மாற்றப்படு கின்றன. பின்னர் Briquetting Machine மூலம் அதிக அழுத்தத்தில் உருளை அல்லது கட்டி வடிவில் தயாரிக்கப்படுகின்றன. தயாரிக்கப் பட்ட கட்டிகள் குளிர்விக்கப்பட்டு, தரம் பரிசோதிக்கப்பட்டு, தொழிற் சாலைகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

முக்கிய மூலப்பொருட்கள்

- நெல் உமி மற்றும் வைக்கோல்.
- தேங்காய் மட்டை மற்றும் நார் கழிவுகள்.
- கரும்புச் சக்கை.
- மரத்தூள்.
- நிலக்கடலை ஓடு.
- மக்காச்சோளத் தண்டுகள்.

சமீபத்திய அரசுத் திட்டங்கள் மற்றும் நிதி உதவிகள்

அ) தேசிய உயிரி ஆற்றல் திட்டம்

இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச் சகம் (MNRE), உயிரியல் எரிபொருள் கட்டிகள் மற்றும் Pellet தயாரிப்பு தொழிற்சாலைகளை ஊக்குவிக்க தேசிய உயிரி ஆற்றல் திட்டத்தைச் செயல்படுத்தியது. இதன் முதல் கட்டம் 2021 22 முதல் 2025-26 வரை திட்டமிடப்பட்டது.

2025 ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட வழிகாட்டுதல் களின்படி, ஆவண நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டன. மேலும், IoT கண்காணிப்பு அல்லது காலாண்டு அறிக்கைகள் மூலம் திட்டங்களைக் கண்காணிக்கும் வசதி அறிமுகப்படுத்தப் பட்டது.

ஆ) மத்திய நிதி உதவி (Central Financial Assistance – CFA)

முந்தைய திட்ட வழிகாட்டுதல்களில் அடுப்புக்கரி உற்பத்தி நிலை யங்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு ஒரு டன் உற்பத்தித் திறனுக்கு ரூ.9 லட்சம் என்ற அடிப்படையில், ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.45 லட்சம் வரை மத்திய நிதி உதவி குறிப்பிடப்பட்டுள்ளது. இது தகுதி, ஒப்புதல் மற்றும் திட்ட வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டது. 2026ல் புதிய விண்ணப்பங்களுக்கு Phase-II நிதி ஒதுக்கீடு தொடர் பான நிலையை சரிபார்க்க வேண்டும். மேற்கண்ட தொகையை தற்போது உறுதியான புதிய மானியமாகக் கருதக்கூடாது.

இ) GOBARdhan திட்டம்

இந்தத் திட்டம் கால்நடைக் கழிவுகள், உணவுக் கழிவுகள் மற்றும் விவசாயக் கழிவுகளைப் பயன்படுத்தி உயிரிவாயு மற்றும் அழுத்தப் பட்ட உயிரிவாயு தயாரிப்பதை ஊக்குவிக்கிறது. இது அடுப்புக்கரி தயாரிப்புத் திட்டம் அல்ல; ஆனால் உயிரியல் கழிவுகளைப் பயனுள்ள ஆற்றலாக மாற்றும் தொடர்புடைய திட்டமாகும்.

ஈ) Crop Residue Management திட்டம்

விவசாயக் கழிவுகளை திறந்தவெளியில் எரிப்பதைத் தவிர்த்து, அவற்றை இயந்திரங்கள் மூலம் சேகரித்து, அரைத்து, மண்ணில் சேர்ப்பது அல்லது உயிரி ஆற்றல் உற்பத்திக்குப் பயன்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். பயிர்க் கழிவு மேலாண்மை இயந்திரங் களை வாங்கவும் வாடகை உபகரண மையம் அமைக்கவும் குறிப்பிட்ட மாநிலங்களில் நிதி உதவி வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் சமீபத்திய பயன்பாட்டு மாற்றங்கள்

தமிழ்நாட்டில் உயிரிப் பொருண்மை பயன்பாடு பாரம்பரிய சமையல் எரிபொருள் பயன்பாட்டிலிருந்து தொழிற்சாலை வெப்ப உற்பத்தி மற்றும் மாற்று எரிசக்தி உற்பத்தி நோக்கி விரிவடைந்து வருகிறது.

தொழிற்சாலைகளில் பயன்பாடு: ஜவுளி ஆலைகள், உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், கொதிகலன்கள் மற்றும் செங்கல் சூளைகளில் நிலக்கரிக்கு மாற்றாக உயிரி எரிபொருள் கட்டிகள் பயன்படுத்தும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன.

1. நெல் கழிவுகளின் பயன்பாடு

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் திருச்சி பகுதிகளில் கிடைக்கும் நெல் உமி மற்றும் வைக்கோலை எரிபொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்த முடியும்.

2. தேங்காய் கழிவுகளின் பயன்பாடு

கோயம்புத்தூர், பொள்ளாச்சி மற்றும் ஈரோடு பகுதிகளில் கிடைக்கும் தேங்காய் மட்டை, நார் கழிவுகள் மற்றும் மரத்தூள் ஆகியவை உயிரியல் எரிபொருள் தயாரிப்புக்குப் பயன்படுகின்றன.

3. கரும்புக் கழிவுகளின் பயன்பாடு

கரும்புச் சக்கை சர்க்கரை ஆலைகளில் ஏற்கனவே கொதிகலன் மற்றும் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதன் பயன்பாட்டை மேம்படுத்தும் வகையில் எரிசக்தி திறன் கொண்ட தொழில்நுட்பங்கள் உருவாக்கப்படுகின்றன.

மின் உற்பத்தியில் பயன்பாடு

உயிரி எரிபொருள் துகள்கள் –ஐ நிலக்கரியுடன் கலந்து அனல் மின் நிலையங்களில் பயன்படுத்தும் கூட்டு எரிப்பு தொழில்நுட்பம் முக்கியத்துவம் பெற்று வருகிறது. எரிபொருள் கட்டை மற்றும் உருண்டைகள் இரண்டும் ஒரே பொருள் அல்ல; இவற்றின் வடிவம் மற்றும் இயந்திரப் பயன்பாடு வேறுபடும்.

தமிழ்நாட்டில் கள ஆய்வு (Survey Details)

உயிரியல் எரிபொருள் கட்டிகளின் பயன்பாடு, மூலப்பொருட் களின் கிடைக்கும் தன்மை, இயந்திரச் செலவு மற்றும் சந்தை வாய்ப்புகளை அறிய விவசாயிகள், சிறு தொழில் முனைவோர், அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் தொழிற்சாலை நிர்வாகி களிடம் கள ஆய்வு மேற்கொள்ளலாம்.

ஆய்வின் நோக்கங்கள்

- விவசாயக் கழிவுகளின் கிடைக்கும் அளவை அறிதல்.
- Biomass Briquettes பற்றிய விழிப்புணர்வை மதிப்பிடுதல்.
- தற்போதைய எரிபொருள் பயன்பாட்டை அறிதல்.
- Briquette உற்பத்திக்கான பொருளாதார வாய்ப்புகளை மதிப்பிடுதல்.
- விவசாயிகளின் கருத்துகள் மற்றும் சவால்களைக் கண்டறிதல்.

ஆய்வு மேற்கொள்ள ஏற்ற பகுதிகள்

தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் நெல் உமி மற்றும் வைக்கோல், கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி தேங்காய் கழிவுகள், ஈரோடு கரும்புச் சக்கை மற்றும் விவசாயக் கழிவுகள், திருச்சி அரிசி ஆலைக் கழிவுகள் மற்றும் சிறு தொழிற்சாலைகள்.

முடிவுரை

உயிரியல் எரிபொருள் கட்டிகள் தயாரிப்பு என்பது விவசாயக் கழிவுகளை மதிப்புமிக்க எரிசக்தியாக மாற்றும் முக்கியமான வேளாண் பொறியியல் தொழில்நுட்பமாகும். தமிழ்நாட்டில் நெல் உமி, தேங்காய் கழிவு, கரும்புச் சக்கை மற்றும் மரத்தூள் போன்ற மூலப்பொருட்கள் கிடைப்பதால் இத்தொழில்நுட்பத்திற்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன. அரசின் உயிரி ஆற்றல் திட்டங்கள், நவீன இயந்திரங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் மாற்று எரிபொருள் தேவை ஆகியவற்றை ஒருங்கிணைத்தால் சுற்றுச்சூழல் பாது காப்புடன் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்த முடியும்.

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல்:*** *sukumarsubramani2002@gmail. com*

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

